## “திராவிட மாடல்” அரசின் மீது நாள்தோறும்

# பொய்களையும் அவதூறுகளையும் அள்ளி வீசும் எடப்பாடி பழனிசாமிக்கு கண்டனம்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கை!



**சென்னை, டிச.2-**

**“திராவிட மாடல்” அரசின் மீது நாள்தோறும் பொய்களையும் அவதூறுகளையும் அள்ளி வீசும் எடப்பாடி பழனிசாமிக்கு கண்டனம் தெரிவித்து கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கை வெளியிட்டுள்ளார்.**

**இதுகுறித்து கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, அவர்களின் அறிக்கை வருமாறு:**

2026 சட்டப்பேரவைத் தேர்தலுக்குக் கூட்டணி கிடைக்காமல் அல்லாடும் திரு.பழனிசாமி, அ.தி.மு.க.வில் நடக்கும் மோதல்களைக் கட்டுப்படுத்த வழி தெரியாமல் திணறும் பழனிசாமி இல்லாததையும் பொல்லாததையும் உளறிக்கொண்டிருக்கிறார். அவருடைய பொய் குற்றச்சாட்டுகளுக்கு அரசின் சார்பாகப் பதில்கள் அளித்தாலும் அவற்றை புறக்கணித்து மீண்டும்மீண்டும் பொய்களையே முன்வைக்கிறார்.

**முதல்வர் உத்தரவுப்படி 7 தனிப்படைகள் அமைப்பு!**

திருப்பூர் மாவட்டம், அவினாசி பாளையம், அழகுமலைக்கு அருகே உள்ள சேமலைக்கவுண்டன் பாளையத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் கொல்லப்பட்ட விவகாரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களது உத்தரவின் பேரில் உடனடியாக ஏழு சிறப்பு தனிப்படைகள் அமைத்து குற்றவாளிகளை விரைந்து பிடிக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது தமிழ்நாடு காவல்துறை.

கொலையாளிகள் 6 பவுன் தங்கச் சங்கிலியையும், கொலை செய்யப்பட்ட செந்தில் குமாரது செல்போனையும் எடுத்துச் சென்றுள்ளனர். திருட்டுக்காக நடந்த சம்பவமா இல்லை வேறு காரணங்களுக்காக நடந்த சம்பவமா என காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். விரைவிலேயே கொலையில் தொடர்புடைய கொலையாளிகள் கைது செய்யப்படுவார்கள்.

ஆனால், எடப்பாடி பழனிசாமி அவர்களோ தனிநபர் குற்றங்களையும் ஆதாயக் கொலைகளையும் குறிப்பிட்டு சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது என்று மீண்டும் மீண்டும் புலம்பிக் கொண்டிருக்கிறார்.

மதுரை மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ள டங்ஸ்டன் சுரங்க உரிமையை உடனடியாக இரத்து செய்ய வேண்டும் என முதலமைச்சர் அவர்கள் பிரதமர் அவர்களிடம் கடிதம் மூலம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

**போராட்டம் வாபஸ் குறித்துக்கூட எடப்பாடி பழனிசாமிக்குத் தெரியவில்லை!**

போராட்டம் நடத்தவிருந்த மக்களைச் சந்தித்து மக்கள் எடுக்கும் முடிவுக்கு 100% தமிழ்நாடு அரசு உறுதுணையாக இருக்கும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் குரலாக அறிவித்த பிறகு போராட்டம் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

வழக்கமாகத் தொலைக்காட்சியில் செய்தி தெரிந்து கொள்ளும் எதிர்க்கட்சித் தலைவர் இன்று டி.வி.யையும் பார்க்காமல் அ.தி.மு.க. சார்பில் போராட்டங்களில் கலந்து கொள்வோம் என அறிவித்துள்ளார்.

வேளாண் பாதுகாப்பு மண்டலமாக டெல்டா மாவட்டங்கள் என்று அறிவித்து சூழலியல் பாதுகாப்புக்கான பரிந்துரையை ஒன்றிய அரசுக்கு பழனிசாமி அரசு அனுப்பவே இல்லை என்ற தகவலை ஒன்றிய அரசு நாடாளுமன்றத்தில் தி.மு.க. உறுப்பினர் டாக்டர் கனிமொழி கேட்ட கேள்விக்குப் பதிலாக அளித்தது.

இந்த உண்மையை மறைத்து போலி பாராட்டுகளில் நனைந்து கொண்டிருக்கிறார் பழனிச்சாமி.

**ஜி.எஸ்.டி. வரி அல்ல அது வழிப்பறி என்றார் முதல்வர்!**

ஜி.எஸ்.டி. வரி வாடகைக் கட்டடங்களுக்கு 18 சதவீதம் வசூலிக்கப்படுவதை எதிர்த்து தி.மு.க. அரசு, ஒன்றிய அரசோடு தொடர்பு கொண்டு, இதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என சொல்லியிருக்கிறார் பழனிசாமி.

அதிக வரி விதிக்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகள் மீது ஜி.எஸ்.டி. வரியை குறைக்க வேண்டும் என ஜி.எஸ்.டி கவுன்சில் கூட்டம் நடக்கும் போதெல்லாம் அதில் பங்கேற்கும் நம்முடைய நிதி அமைச்சர் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

ஜி.எஸ்.டி.வரி அல்ல. அது வழிப்பறி என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்.

வாடகைக் கட்டடங்களுக்கு 18 சதவீதம் வசூலிக்கப்படுவதை தி.மு.க. கடுமையாக எதிர்க்கிறது.

ஜி.எஸ்.டி. -யில் கிடைக்கும் வருவாயில் 64 விழுக்காடு 50 சதவிகித அடித்தட்டு மக்களிடம் இருந்து வசூலிக்கப்படுகிறது. 33 விழுக்காடு ஜி.எஸ்.டி 40 சதவிகித நடுத்தர மக்களிடம் இருந்து பெறப்படுகிறது. வெறும் 3 விழுக்காடு ஜி.எஸ்.டி. மட்டுமே 10 சதவிகித பெரும் பணக்காரர்களிடம் இருந்து கிடைக்கிறது.

தொடர்ந்து ஏழைகளையும் நடுத்தர மக்களையும் வஞ்சிக்கும் ஜி.எஸ்.டி. வரியை மோடி அரசு கொண்டு வந்த காலத்தில் இருந்து எதிர்க்க துணிவில்லாமல் அமைதியாக இருந்த பழனிசாமி, இன்றைக்கு ஏனோ அதுபற்றி பேசுகிறார்.

**ஒன்றிய அரசை எதிர்க்காத எடப்பாடி!**

அதுவும் ஒன்றிய அரசை எதிர்த்தோ அல்லது ஜி.எஸ்.டி. வரி விதிப்பைக் கண்டித்தோ பேசாமல் பந்தை தமிழ்நாடு அரசு பக்கம் திருப்பி, ‘தி.மு.க. அரசு, ஒன்றிய அரசோடு தொடர்பு கொண்டு, நடவடிக்கை எடுக்க வேண்டும்’ என சொல்லியிருக்கிறார்.

ஒன்றிய அரசால் அமைக்கப்பட்ட 15-ஆவது நிதி ஆணையம் தனது அறிக்கையில், 2022-2023 ஆம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகள் மானியம் பெறுவதற்கான தகுதியைப் பெறும் பொருட்டு 2021-22 ஆம் ஆண்டில் சொத்துவரி தள வீதங்களை (Floor rates) அறிவிக்கை செய்ய வேண்டும்.

மாநிலத்தின் மொத்த உள்நாட்டு வளர்ச்சிக்கு ஏற்றவாறு “ஆண்டுதோறும் சொத்துவரி வீதத்தை உயர்த்திட வேண்டும்” என நிபந்தனைகளை விதித்துள்ளது. அதே போல ஒன்றிய அரசின் ‘தூய்மை இந்தியா திட்டம்’ மற்றும் அம்ரூட் 20 ஆகியவற்றுக்கும் இதே நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

**முழு பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதா?**

ஒருவேளை தமிழ்நாடு இதை கடைப்பிடிக்காத பட்சத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2021-26 வரை நமக்கு கொடுக்கப்பட வேண்டிய ஒன்றிய அரசின் மானியம் ரூ.4,36,361 கோடி நிறுத்தி வைக்கப்படும், அதோடு தூய்மை இந்தியா திட்டம் , அமரூட் 20 திட்டம் ஆகியவற்றிற்கான நிதியும் ஒதுக்கப்படாது. ஒன்றிய அரசு இப்படி கடுமையான விதிகளை 15 வது நிதியாணையத்தின் மூலம் விதித்த போது அவர்களோடு நட்புறவில் இருந்தவர்தான் எடப்பாடி பழனிச்சாமி. தற்போது தமிழ்நாடு அரசுதான் சொத்து வரி உயர்வுக்குக் காரணம் என்று சொல்வது முழு பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது போல உள்ளது.

**உட்கட்சி மோதலை மறைக்க குறை கூறுகிறார்!**

உட்கட்சி மோதல்களையும், கூட்டணிக்குக் கட்சிகளை ஈர்க்க முடியாத இயலாமையையும் மறைப்பதற்காக திராவிட மாடல் அரசை தினந்தோறும் குறை சொல்லிக் கொண்டே இருக்கும் எடப்பாடி பழனிசாமி அவர்களே! உங்கள் பேச்சை தமிழ்நாட்டு மக்கள் ஒருபோதும் நம்ப மாட்டார்கள்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

## அறந்தாங்கி நகர தி.மு.க. சார்பில் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்!

# அமைச்சர் எஸ்.ரகுபதி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரை!

புதுக்கோட்டை, டிச.2-

தி.மு.க. இளைஞரணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு அறந்தாங்கி நகர தி.மு.க. சார்பில் பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் பொதுக்கூட்டம் அறந்தாங்கி வ உ சி திடலில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு அறந்தாங்கி நகர தி.மு.க. செயலாளர் க.ராஜேந்திரன் தலைமை தாங்கினார். அறந்தாங்கி நகர்மன்றத் தலைவர் இரா. ஆனந்த் வரவேற்றார்.

நகர்மன்ற துணைத் தலைவர் தி.முத்து, முன்னாள் நகர்மன்ற தலைவர் மாரியப்பன், நகர அவைத் தலைவர் பழனிச்சாமி, நகர துணைச் செயலாளர்கள் ராமசாமி, அனுராதா ராஜேந்திரன், நகர பொருளாளர் அனந்தராமன், அறந்தாங்கி தொகுதி தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் செந்தில்வேலன், நகர ஒருங்கிணைப்பாளர் ரஜினி, மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், நகர சபை கவுன்சிலர்கள், இளைஞர் அணி நிர்வாகி கள், வட்டச் செயலாளர்கள் வட்ட பிரதிநிதிகள் முன்னிலை வைத்தனர்.

நிகழ்வுகளில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர், தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கி பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தலைமைக் கழக பேச்சாளர்கள் பவானி கண்ணன், வியானி விஸ்வா, தீன்ஷா நூரப் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

நிகழ்ச்சியில் அறந்தாங்கி முன்னாள் எம்எல்ஏ உதயம் சண்முகம், மாவட்ட துணைச் செயலாளர் அடைக்கலம், மாவட்ட பொருளாளர் அபுதாஹீர், ஒன்றிய திமுக செயலாளர் பொன். கணேசன், சக்தி ராமசாமி, வே.பொன்துரை, எஸ்.எம். சீனியார் , தலைமை செயற்குழு உறுப்பினர் ஆர்.ஆர். கே.கலைமணி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணி ராஜன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் அடைக்கல ராஜா நன்றி கூறினார். கூட்டத்தில் ஆயித்திற்க்கும் மேற்பட்ட பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் அனைத்து நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆலந்தூர் ம. ஆபிரகாம்

### டிசம்பர் 2 (1987)



ஆலந்தூர் நகரக் கழகச் செயலாளராகவும் – சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

இந்தித் திணிப்பை எதிர்த்து கழகம் நடத்திய சட்டப்பிரிவு நகல் எரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக, 1986ஆம் ஆண்டு ஆளுங்கட்சியால் சட்டமன்றத்தில் பதவிப் பறிப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு, பதவி பறிக்கப்பட்ட பேராசிரியர் உள்ளிட்ட பதின்மருள் ஆபிரகாமும் ஒருவர்.

கழகம் நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

நெருக்கடி நிலை காலத்தில் ‘மிசா’ கைதியாக ஓராண்டு சிறையில் இருந்தவர்.

“கழகத்தின் இரும்புத் தூண், எதிர்ப்புக்கும், இன்னலுக்கும், அடக்குமுறைக்கும் என்றுமே வளைந்து கொடுக்காத உறுதி படைத்த கொள்கைக் குன்றம்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோ.சி. மணி

### டிசம்பர் 2 (2016)



தலைவர் கலைஞர் அவர்களால் ‘தம்பி மணி’ என பாசம் பொங்க அழைக்கப்பட்ட கழகத்தின் தளகர்த்தர்களில் முதன்மையானவராகத் திகழ்ந்த இவர், மிட்டா, மிராசுகள் நிறைந்த தஞ்சை மாவட்டத்தில் ஒரு சாதாரண, தொண்டனாக திராவிட இயக்கக் கொள்கைகளையே தமது மூலதனமாகக் கொண்டு அதனை நெஞ்சில் ஏந்தி வலம் வந்தவர். சிறு வயது முதலே தன்னை இயக்கத்தில் ஒப்படைத்துக் கொண்டு ஓயாது பணியாற்றிய உயரிய பண்புக்கும் – எளிமைக்கும் சொந்தக்காரர்.

தந்தை பெரியார் அவர்களின் மேடைப் பேச்சால் ஈர்க்கப்பட்டு, திராவிடர் கழகத்தில் இணைத்துக் கொண்ட இவர், கழகம் தொடங்கிய 1949–ஆம் ஆண்டிலேயே மேக்கிரி மங்கலம் கிராமக் கிளையின் பொருளாளராகவும் – மயிலாடுதுறை வட்டக்கிளைச் செயலாளராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் – மாவட்டக் கழகச் செயலாளராகவும் – மண்டலப் பொறுப்பாளராகவும் – உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினராகவும் செயல்பட்டு, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் கழகத்தை வளர்க்க ஓய்வறியாது பாடுபட்டவர்! தலைவர் கலைஞர் அவர்களின் சொல்லே அவருக்கு வேத வாக்கு எனச் செயல்பட்டவர்.

தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்காக மட்டுமின்றி, தமிழக விவசாயிகளுக்காகவும் போராட்டங்கள் பல நடத்தியதோடு மட்டுமல்லாமல், இவர் கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர். குறிப்பாக நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறையில் இருந்தவர்.

இவர் குடந்தை மத்திய கூட்டுறவு வங்கியின் தலைவராகவும் சந்திரசேகர்புரம் கூட்டுறவு மொத்தவிற்பனைப் பண்டக சாலையின் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

இவர் 1962, 1989, 1996, 2001, 2006 என ஐந்து முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1968–ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து இரண்டு முறை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் பணியாற்றினார். 1989, 2006 ஆகிய இரு முறை வேளாண்மைத் துறை அமைச்சராகவும் – 1996ல் உள்ளாட்சித் துறை அமைச்சராகவும் தலைவர் கலைஞர் தலைமையிலான அமைச்சரவையில் திறம்படப் பணியாற்றியவர்.

2001ல் நடைபெற்ற முப்பெரும் விழாவில் இவருக்குப் பெரியார் விருதினை, தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்.

“என்னரும் தளகர்த்தர் கோ.சி.மணி, எங்கோ போய்விட்டாரே!” என தலைவர் கலைஞர் இரங்கல் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**